தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்கான

வழிகாட்டல் கருத்தரங்கு - 2014



ஆசிரிய வளவாளர்கள்

திரு.வே அன்பழகன்

திரு.S. நிமலன்

தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சைக்கான

வழிகாட்டல் கருத்தரங்கு - 2014

ஆசிரிய வளவாளர்கள்

திரு.வே. அன்பழகன்

திருமதி.த.தர்மரத்தினம்

திரு.S .நிமலன்



"சின்ன விழி அசைத்து சிரித்துவரும் சித்திரங்களை
அள்ளி அணைத்து அரிய கல்வி ஊட்டிடுவோம்!"

www.kalvi.lk

மாணவர்களுக்கான அறிவுறுத்தல்கள்

வினாத்தாள் I

01) இவ்வினாப்பத்திரம் 40 வினாக்களை உள்ளடக்கியது.

02) 45 நிமிட நேரமே வழங்கப்படும்.

03) குறிப்பிட்ட நேரத்துக்குள் சகல வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும்.

04) வினாப்பத்திரம் I இல் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களின் படியே செயலாற்றுவது மிகப் பிரதானமாகும். உதாரணமாக ஒரு வினாவுக்கு 3 விடைகள் தரப்பட்டு சரியான விடையின் இலக்கத்தைப் புள்ளிக்கோட்டில் எழுதுக எனக் குறிப்பிடப்பட்டிருப்பின், சரியான விடைக்கு கோடிடப்படுமாயின் அவ்விடைகளுக்குரிய புள்ளிகள் வழங்கப்படமாட்டாது.

05) ஒரு வினாவுக்கு இரு சொற்களோ இரு எண்களோ எழுத வேண்டியிருப்பின் ஒன்றை மாத்திரம் எழுதப்பட்டிருப்பின், அவ்வினாவுக்கு ஒரு புள்ளியேனும் வழங்கப்படுவதில்லை.

06) நீங்கள் எழுதும் விடைகளில் எழுத்துப் பிழைகள் வருவதைக் கூடுமானவரை தவிர்த்துக் கொள்ளுங்கள்.

07) சரியான விடையின் கீழ்க் கோடிடுக என்றவாறு கேட்கப்படும் வினாக்களில் மிகச்சரியான விடையைத் தெரிந்து அதன் இலக்கத்தை மட்டும் கோடிடாமல் முழு விடைக்கும் ஒழுங்காகக் கோடிடுக.

உ+ம் 3) செக்கன், நிமிடம், மணித்தியாலம், நாள்

08) சரியான விடைக்குக் கோடிடும்போது ஒரேயொரு விடைக்கு மட்டும் கோடிடுக. இரு விடைகள் கோடிடப்பட்டு அதில் சரியான விடை இடம்பெற்றிருந்தாலும் அது பிழையான தெரிவாகவே கருதப்படும்.

09) செய்கை வழிகள் எதுவும், உமக்குத் தரப்படும் பரீட்சை விடைத்தாளில் இடம்பெறாமல் தவிர்த்துக் கொள்ளுங்கள். தேவையேற்படின் பென்சிலால் குறித்து விடைகளைப் பெறலாம்.

10) விடைகள் யாவும் தெளிவான கையெழுத்தில் இருக்க வேண்டும்.

வினாத்தாள் I பற்றிய மிக முக்கிய விடயங்கள்

I) மிகவும் வேகமும் விவேகமும் வேண்டும்.

II) உங்கள் முழுத்திறமையையும் பயன்படுத்தி 35 சரிக்கு கூடுதலாகப் பெறவேண்டும்.

வினாத்தாள் II

01. இவ்வினாப்பத்திரத்திற்கு விடையெழுத 1 மணித்தியாலம் 15 நிமிடங்கள் தரப்படும்.
02. இவ்வினாப்பத்திரம் தரம் 1 தொடங்கி 5 வரையுள்ள அரச பாடத்திட்டத்தை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்படும்.
03. தமிழ்மொழி, சுற்றாடல் செயற்பாடுகள், கணிதம், ஆங்கிலம், அழகியல், ஆக்கம், உடற்கல்வி, சிங்களம் ஆகியவற்றிலிருந்து வினாக்கள் தொகுக்கப்படும்.
04. குறிப்பிட்ட நேரத்துள் சகல வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும்.
05. வினாப்பத்திரத்தில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களின் படியே செயலாற்றுவது மிகப் பிரதானமாகும்.
06. நீங்கள் எழுதும் விடைகளில் எழுத்து பிழைகள் வருவதைக் கூடுமானவரை தவிர்த்துக் கொள்ளுங்கள்.
07. செய்கை வழிகள் எதுவும், உமக்குத் தரப்படும் பரீட்சை வினாத்தாளில் இடம்பெறாமல் தவிர்த்துக் கொள்ளுங்கள்.
08. விடைகள் யாவும் தெளிவாக கையெழுத்தில் இருக்க வேண்டும்.
09. கட்டுரைக்கு விடையளிக்கும் போது.....

- ❖ காலத்தைத் தீர்மானிக்க வேண்டும்.
- ❖ வாக்கியங்களுக்கு எதை எழுதுவது எனத் திட்டமிடவேண்டும்.
- ❖ கருத்துத் தெளிவாக இருக்க வேண்டும்.
- ❖ ஐந்து சொற்களுக்குமேல் இருத்தல் வேண்டும்
- ❖ எழுவாய், பயனிலை திருத்தமாக அமைத்த வாக்கியங்களாக இருக்க வேண்டும்.
- ❖ வாக்கியங்கள் தலைப்பிற்குப் பொருத்தமானதாக எழுதப்பட்டிருக்க வேண்டும்.
- ❖ எழுத்துப்பிழைகளின்றியிருக்க வேண்டும்.
- ❖ பேச்சு மொழியில் எழுதப்படலாகாது.
- ❖ வாக்கியங்கள் கூறியது கூறலாக அமையக் கூடாது.
- ❖ வினா வினவப்பட்டுள்ள காலத்தைக் கருத்திற்கொண்டு விடையெழுத வேண்டும்.
- ❖ ஆங்கிலச் சொற்கள் கலத்தல் கூடாது.
- ❖ உறுப்பான எழுத்தாக இருக்க வேண்டும்.
- ❖ தலைப்பை திருப்பி எழுதக்கூடாது.
- ❖ முயற்சி உள்ள நல்ல பிள்ளை என்பதை உறுதிப்படுத்த முழுமையாக கட்டுரையை எழுதி முடித்தல் வேண்டும். (முழுப் புள்ளிகளை இலகுவாகப் பெற்றுக் கொள்ளலாம்)

www.ikeu.lk

- சரியான விடையின் கீழ்க் கோடிடுக.

01. ஒரு வகுப்பில் உள்ள ஐந்து நண்பர்கள் ஒவ்வொருவரும் அவர்களின் பிறந்த தினத்திற்கு ஒருவருக்கொருவர் வாழ்த்து மடல்களை அனுப்பிக் கொள்வர். ஒரு வருடத்தில் இவர்களிடையே பரிமாறிக் கொண்ட வாழ்த்து மடல்களின் எண்ணிக்கை யாது?


1) 5 2) 20 3) 25


02. ரமணியின் வயது ரூபிணியின் வயதின் அரைவாசியாகும். ரூபிணியின் வயது தர்சினியின் வயதின் அரைவாசியாகும். மூவரினதும் வயதினதும் மொத்தம் 35 ஆண்டுகள் எனில் தர்சினிக்கு எத்தனை வயது?

1) 15 வருடங்கள் 218 வருடங்கள் 3) 20 வருடங்கள்

- மின் அலங்காரச் சரம் ஒன்றில் இருந்த மின்குமிழ்களின் எண்ணிக்கைகள் பற்றிய தகவல்கள் பின்வருமாறு குறியீடுகள் மூலம் காட்டப்பட்டுள்ளது.







03. இதற்கேற்ப மின் அலங்காரச் சரத்தில் எந்நிற மின்குமிழ்கள் அதிக எண்ணிக்கையில் உள்ளன?

1) நீலநிற மின்குமிழ்கள் 2) சிவப்புநிற மின்குமிழ்கள் 3) பச்சைநிற மின்குமிழ்கள்

04. குகன் நின்ற வரிசையில் அவனுக்கு முன்னால் எட்டுப் பேர் நின்றனர். வரிசையின் கடைசியில் நின்றவர் முதலாவது நபராக வரும் வகையில் அனைவரும் மறுபக்கத்துக்குத் திரும்பினர். அப்போது குகனின் முன்னால் மூவர் நின்றனர் எனின், அவ்வரிசையில் மொத்தமாக எத்தனை பேர் நின்றனர்?

1) 10 பேர் 2) 11 பேர் 3) 12 பேர்

05. பாதை ஒன்றை அமைப்பதற்கு 4 மனிதர்களுக்கு 10 நாட்கள் தேவை எனக் கணக்கிடப்பட்டுள்ளது. இதே வேலையை 8 மனிதர்களைப் பயன்படுத்தினால் எத்தனை நாட்களில் முடிப்பர்?

1) 5 நாட்கள் 2) 10 நாட்கள் 3) 20 நாட்கள்

06. 2014 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 1ஆந் திகதி புதன்கிழமை ஆகும். ஜனவரி மாதத்தில் உள்ள புதன்கிழமைகளினதும், செவ்வாய்க்கிழமைகளினதும் எண்ணிக்கையும் முறையே,

1) 4, 4 ஆகும் 2) 4, 5 ஆகும் 3) 5, 4 ஆகும்

07. 2014 ஆம் ஆண்டில் 365 நாட்கள் உள்ளன. அவ்வாண்டில் எத்தனை புதன்கிழமைகள் உள்ளன?

1) 48 2) 50 3) 52 4) 53

08. ஒரு வீதியில் இரு மின்கம்பங்களுக்கிடையே 2 கொடிகள் வீதம் தொங்கவிட்டு அவ்வீதியை அலங்கரிக்கத் தீர்மானிக்கப்பட்டது. வீதியில் 8 மின்கம்பங்கள் இருந்தால், அவற்றுக்கிடையே தொங்கவிடுவதற்கு எத்தனை கொடிகள் தேவை?

1) 14 கொடிகள் 2) 16 கொடிகள் 3) 18 கொடிகள்

09. நான்கு ஆசிரியர்கள் பாடசாலைக்கு வருகை தந்த நேரங்கள் பின்வரும் கடிகாரங்களில் காட்டப்பட்டுள்ளது.


சந்திரன்


கமலா


சிறீதேவி


விநோதன்

இவ்வாசிரியர்கள் நால்வரும் பாடசாலைக்கு வருகை தந்த ஒழுங்கு வரிசையைக் குறிக்கும் சரியான விடை எது?

1) சிறீதேவி, கமலா, விநோதன், சந்திரன் 2) சிறீதேவி, விநோதன், கமலா, சந்திரன
3) விநோதன், சிறீதேவி, கமலா, சந்திரன்

10. ஒரு பிள்ளை நாற்று மேடையிலிருந்து வாங்கிய மரக்கன்றுகள் பற்றிய பின்வரும் விபரத்தை முன்வைத்தான்


பழமரக்கன்று - 10 பழமரங்களல்லாத கன்றுகள் - 12
மாங்கன்று - 2 தென்னங்கன்றுகள் - 4


இதன்படி அவன் வாங்கிய மொத்த மரக்கன்றுகள் எத்தனை


1) 16 2) 22 3) 28

11) பின்வரும் உருவில் அட்டைத்தாளினால் செய்யப்பட்ட ஒரு பெட்டி உள்ளது. அது விரிக்கப்படும்போது தோற்றும் விதம் யாது?




1) 

2) 

3) 

12. இவ்வுருவுடன் தொடர்புட்ட சரியான கூற்றைத் தெரிவு செய்க.



1) பகுதி A ஆனது சிவப்பு, நீலம், மஞ்சள் என்னும் மூன்று நிறங்களுக்கும் உரியது.

2) B , C ஆகிய பகுதிகள் மஞ்சள் நிறமுள்ளவை.


3) பகுதி C நீலநிறமாக இருக்கும் அதே வேளை பகுதி D சிவப்பு நிறமானது.

13. முழு உருவத்தினதும் பரப்பளவு அதன் நிழற்றப்பட்டுள்ள பகுதியின் எத்தனை மடங்காகும்



1) 8
2) 10
3)12

14. முழு உருவத்தினதும் சுற்றளவு நிழற்றப்பட்டுள்ள பகுதியின் சுற்றளவின் எத்தனை மடங்காகும்.



1) 4
2) 6
3) 8

15. 10 படிகள் உள்ள படிக்கட்டில் A முதல் B பத்தாம் படியிலும் நிற்கின்றனர் A ஒரு படியில் ஏறும்போது B இரு படிகள் இறங்கினால். அவர்கள் இருவரும் எத்தனையாவது படியில் சந்திப்பார்கள்?

1) 4 2) 5 3) 6

16. அடைப்பில் உள்ள மிகச் சிறிய ஒற்றை எண்ணை மிகப் பெரிய இரட்டை எண்ணால் பெருக்கும்போது கிடைக்கும் விடை யாது?

6	5	4	23	15
7	19	33	8	3
10	2	30	17	29

1) 90 2) 58 3) 50

17. ஒக்ரோபர் 01 உலக சிறுவர் தினமாகும். 2014 ஆம் ஆண்டில் யனவரி 01 தொடக்கம் ஒக்ரோபர் 01 வரையுள்ள நாட்களின் எண்ணிக்கை யாது?

1)237 2) 274 3)275

18. சதுர வடிவமான மரக்கறித் தோட்டம் ஒரு பக்கத்தின் நீளம் 15 மீற்றர் ஆகும். அதன் எல்லை வழியே 3 மீற்றர் இடைத் தூரங்களில் கம்பித் தூண்கள் உள்ளன. அவ்வாறு உள்ள கம்பித் தூண்களின் எண்ணிக்கை யாது?

1) 24 2) 20 3) 16

19. சிவா , சுதன் ஆகிய இருவரினதும் வயதுகளின் கூட்டுத்தொகை 20 வருடங்கள் ஆகும். சிவாவிலும் பார்க்க சுதன் 8 வருடங்கள் இளையவன். ஆவான். சிவாவின் வயது யாது?

1) 12 வருடங்கள் 2) 14 வருடங்கள் 3) 16 வருடங்கள்

20. தாயார் ஒருவர் தன்னிடத்திலிருந்த பணத்தின் $\frac{1}{2}$ ஐப் புத்தகங்கள் வாங்கச் செலவழித்தார். அதன் பின்னர் அவர் மீதிப் பணத்தை இரு சம பகுதிகளாப்பிரித்து அவற்றில் ஒரு பகுதியை ஆடைகள் வாங்கச் செலவழித்தார். பின்னர் அவரிடம் எஞ்சியிருந்த பணம் ரூபாய் 100.00 எனின் அவர் புத்தகங்கள் வாங்கச் செலவழித்த பணம் எவ்வளவு?

1) ரூபாய் 100 2) ரூபாய் 200 3) ரூபாய் 400

www.ikeou.lk

☛ வினாத்தாள் I இன் உள்ள முக்கிய விடயங்கள்.....

I விடைகளை வைத்து வினாக்களுக்குரிய விடைகளைக் கண்டுபிடித்தல்

1) நாதன், சாந்தன் ஆகியோரின் வயதுகளின் கூட்டுத்தொகை 36 வருடங்கள். நாதன் சாந்தனைவிட 4வருடங்கள் இளையவன் எனின் நாதனின் வயது யாது?
1) 18 வருடங்கள் 2) 16 வருடங்கள் 3) 20 வருடங்கள்


2) தற்போது கண்ணனின் வயது 12 ஆகும். அவனுடைய வயது சகோதரனின் வயதின் நான்கு மடங்காகும். கண்ணனின் வயது இன்னும் எத்தனை ஆண்டுகளில் சகோதரனின் வயதின் இரு மடங்காக இருக்கும்.
1) 6 2) 10 3) 24

3) சங்கீதா ரூபாய் 2 முத்திரைகளையும் ரூபாய் 5 முத்திரைகளையும் சம எண்ணிக்கையில் வாங்கினாள் அவற்றுக்காக அவன் ரூபாய்35ஐச் செலவிட்டிருப்பின் அவள் வாங்கிய முத்திரைகளின் மொத்த எண்ணிக்கை யாது?
1) 6 2) 8 3) 10

4) தற்போது அமலியின் வயது அவளது அம்மாவின் வயதின் $\frac{1}{4}$ ஆகும் அம்மாவுக்கு இப்போது வயது 40 வருடங்கள் எனின். அமலி பிறக்கும் போது அம்மாவின் வயது எத்தனை வருடங்கள் ஆகும்?
1) 28 2) 30 3) 32


II வினாக்களிலே குறித்த விடை பெறல்

1) உருக்களில் காணப்படும் கூடுகளுக்குள் உள்ள உருக்களுக்கு ஏதோவொரு பெறுமதிகள் கொடுக்கப்பட்டுள்ளன. அவ் உருக்களின் கூட்டல் நிரையாகவும், நிரலாகவும் காட்டப்பட்டுள்ளன. பெறுமதி கொடுக்கப்படாது"?" அடையாளத்தால் காட்டப்பட்ட இடத்திற்கு வரவேண்டிய விடையைத் தெரிவு செய்க.



1) 10
2) 9
3) 8

2) தொடக்கத்தில் உள்ள உருவில் குறைவாக இருக்கும் பகுதிக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.



III கிரகித்து மிகச் சரியான தெரிவை முன்னிறுத்தல்

பின்வரும் விவரத்தைப் பயன்படுத்தி விடை எழுதுக.

எனது பெயர் சேகர். நான் வகுப்பு முடிவடைந்து வீட்டுக்கு வந்துகொண்டிருந்தேன். வீதியின் பக்கத்தில் ஒரு பேருந்துத் தரிப்பிடத்தில் சிறிய தாயாரும், சிறிய தந்தையாரும் நின்று கொண்டிருந்தனர். அவர்களுடைய மகள் சுசீலா வகுப்பு முடிவடைந்துவரும்வரைக்கும் அங்கே காத்திருந்தனர். அவர்கள் என்னைக் காணவில்லை. அந்நேரத்தில் ஒரு பேருந்து தரிப்பிடத்திற்கு அண்மையில் நிறுத்தப்பட்டது. அலுவலக வேலை முடிவடைந்து வருபவர்கள் அப்பேருந்தில் நிறைந்து இருந்தனர். தங்கை சுசீலா அப்பேருந்திலிருந்து இறங்கி வந்தார்.

1) பின்வரும் கூற்றுக்களிடையே சரியான கூற்றைத் தெரிவு செய்க.
1) சேகர் தரம் ஐந்தில் கற்கும் மாணவன் எனக் கூறலாம்.
2) சுசீலா தரம் நான்கில் கற்கும் மாணவி எனக் கூறலாம்.
3) அவர்கள் இருவரும் கற்கும் தரங்கள் பற்றிக் கூறுவது கடினம்.

2) பின்வரும் கூற்றுக்களிடையே பிழையான கூற்றைத் தெரிவு செய்க.
1) சேகரின் தந்தை சுசீலாவின் தந்தையின் தமையனாக இருக்கலாம்.
2) சுசீலாவின் தாயார் சேகரின் தாயாரின் தங்கையாக இருக்கலாம்.
3) சுசீலாவின் தாயார் சேகரின் தந்தையின் தங்கையாக இருக்கலாம்.

www.lkedu.lk

IV வேகமாக சிந்தித்தல்

பின்வரும் பொருட்கூட்டத்தின் விலைகளை அவதானித்து வினாக்களை எழுதுக.

1 பந்து 1 பேனை ரூபாய் 44.00	1 புத்தகம் 1 பேனை ரூபாய் 50.00	1 பந்து 1 புத்தகம் ரூபாய் 54.00

1) பந்து ஒன்றின் விலை யாது? (.....ரூபாய்..... சதம்)

2) புத்தகம் ஒன்றின் விலை யாது? (.....ரூபாய்..... சதம்)

3) பேனை ஒன்றின் விலை யாது? (.....ரூபாய்..... சதம்)

V வாசித்து வினாவைப் படமாக்குதல்

மதன் ஆண்பிள்ளை ஆவான். மதனின் அக்காவிற்கு இரண்டு ஆண் சகோதரர்களும் இரண்டு சகோதரிகளும் உள்ளனர்.

1) மதனுக்கு எத்தனை ஆண் சகோதரர்கள் உள்ளனர்?
1) 3 2) 2 3) 1

2) மதனுக்கு எத்தனை சகோதரிகள் உள்ளனர்?
1) 2 2) 3 3) 4

3) கூடை ஒன்றிலே சில வர்ணப்பந்துகள் காணப்பட்டன. அவற்றுள் 7 மஞ்சள் நிறமானதாகும். 9 பச்சை நிறமானதாகும் சில வெள்ளை நிறமானதாகும். வெள்ளை நிறப் பந்துகளின் எண்ணிக்கை மஞ்சள் நிறப்பந்துகளின் எண்ணிக்கையிலும் அதிகமாக இருப்பினும் பச்சை நிறப்பந்துகளிலும் குறைவாகவேயுள்ளன எனின் கூடையிலுள்ள பந்துகளின் எண்ணிக்கை யாது?

(.....)

VI நியதிகளை அறிந்து செயற்படல்

2013 ஆம் ஆண்டு ஜனவரி 01 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை ஆகும். இதற்கேற்ப 01, 02 ஆகிய வினாக்களுக்குரிய விடையைத் தெரிவுசெய்க.

01. 2013 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் உள்ள புதன்கிழமைகளின் எண்ணிக்கையும் வியாழக்கிழமைகளின் எண்ணிக்கையும் முறையே,
1) 4, 4 ஆகும். 2) 4, 5 ஆகும் 3) 5, 4 ஆகும் 4) 5, 5 ஆகும்.

02. 2013 ஆம் ஆண்டில் 365 நாட்கள் உள்ளன. அவ்வாண்டில் எத்தனை புதன்கிழமைகள் உள்ளன?
1) 48 2) 50 3) 52 4) 53

03. ஐந்து சனிக்கிழமைகள் உள்ள ஓர் ஏப்பிரல் மாதத்தில் அந்த ஞாயிற்றுக்கிழமைகளின் தேதிகளின் மொத்தத்திற்கு இருக்கத்தக்க உயர்தரப்பட்சப் பெறுமானம்?
1) 75 2) 80 3) 85


VII மிகச் சரியான தெரிவை முன்னிறுத்தல்

எல்லாப் பறவைகளுக்கும் உள்ள பொதுவான இயல்பு எது?
1) பறப்பதற்கு இயலுமாக இருத்தல்
2) உடலில் இறகு இருத்தல்
3) பழங்களை மட்டும் உணவாகக் கொள்ளல்

www.ikedu.lk

VIII கற்பனையில் உருவகித்து (குறித்து / விடைகளை நீக்கி) விடையை அறிதல்

☞ சதுரமுகி ஒன்றின் 6 பக்கங்கள் 1 தொடக்கம் 6 வரை இலக்கமிடப்பட்டுள்ளன. இச்சதுரமுகியின் மூன்று உருக்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.



1) இச்சதுரமுகியில் இலக்கம் 3 இற்கு எதிரே இருக்கும் பக்கத்தில் உள்ள இலக்கம் யாது?
1) 1 2) 2 3) 6

2) இச்சதுரமுகியில் இலக்கம் 4 இற்கு எதிரே இருக்கும் பக்கத்தில உள்ள இலக்கம் யாது?
1) 1 2) 3 3) 5

☛ வினாத்தாள் II இன் உள்ள முக்கிய விடயங்கள்.....

* பாடல் / பந்தியைக் கிரகித்து விடை எழுதுதலும் பந்தியிலிருந்து / பாடலிலிருந்து விடைகளைத் தெரிந்து எழுதுதலும்

* பாடல்/ பந்தியில் இருந்து வரும் வினாக்கள்

I அடைமொழி
III இணைமொழி
III அடுக்குமொழி
IV இரட்டைக்கிளவி
V அடுக்கிடுக்குத்தொடர்
VI திணை, பால், எண், இடம் காலம்
VII ஒத்தகருத்து
VIII எதிர்க்கருத்து
X பந்தியில் இருந்து நேரடி வினாக்கள்

01. பாடலை வாசித்து விடைகளைப் பாடலில் இருந்து தெரிந்து எழுதுக

கடலின் மீது செல்லும் கப்பல்
பார், தம்பி, பார் - அதைக்
காணப் பலர் வருவதையே
பார், தம்பி, பார்.

"தடதட"வென்று அலைகள் வந்து
பார், தம்பி, பார் - காலைத்
தழுவி விட்டுப் போவதையே
பார், தம்பி, பார்.

சங்கும் நல்ல கிளிஞ்சல்களும்
பார், தம்பி, பார் - இங்கே
சரள மாகக் கிடைக்குதடா
பார், தம்பி, பார்.

பொங்கு கின்ற பாலினைப்போல்
பார், தம்பி, பார் - இங்கு
தங்கி நிற்கும் நுரையுமுண்டு
பார், தம்பி, பார்.

i) பாடலில் கூறப்படும் காட்சி யாது? .....

ii) உயர்திணை ஆண்பால் பெயர்ச்சொல்? .....

iii) "அழி" என்பதைக் குறிக்கும் ஒத்தகருத்துச் சொல் .....

iv) "அங்கு" என்பதைக் குறிக்கும் எதிர்க்கருத்துச்சொல்? .....

v) உவமைத் தொடரை எழுதுக. .....

vi) பெயரடைமொழி யாது? .....

vii) இரட்டைக்கிளவியை எழுதுக. .....

viii) அலைகள் எதனைத் தழுவுகின்றது. .....

www.kedu.lk

02. பாடலை வாசித்து விடைகளைப் பாடலில் இருந்து தெரிந்து எழுதுக.

அரிவு வெட்டு

உண்ண உணவு தந்திடும்
உழவர் வாழ்க, வாழ்கவே
மண்ணை உழுது பயிர்களை
வளர்க்கும் உழவர் வாழ்கவே

ஒன்றை நூறு நெற்களாய்
உண்டு பண்ணித் தருபவர்,
நன்கு உழுது வியர்வையால்
நனைத்து போக உழைப்பவர்,

கண்ணைப் போலப் பயிர்களைக்
காத்து உயிர்கள் காப்பவர்
உண்ண உணவு இன்றியே
உடல் வருந்தல் நீதியோ?

பாடு பட்டு உழுபவர்,
பலனும் கண்டு தருபவர்,
நாடு வளர வாழ்பவர்,
நன்கு வாழ்க, வாழ்கவே!

அழ வள்ளியப்பா

1. நாடு வளர வாழ்பவர் யார்? .....

2. உயர்திணைப் பெயர் சொல்? .....

3. உவமானம் யாது? .....

4. மிகக் கவனமாகப் பாதுகாத்தல் என்பதைக் குறிக்கும் தொடர் .....

5. பெயரெச்சச் சொல் யாது? .....

6. அஃறிணைப் பன்மைப் பெயர்ச்சொல் .....

7. **ஒத்தகருத்து எழுதுக.**

சாப்பாடு - ..... மேனி- .....

கமக்காரர் - ..... பயன் - .....

விழி - ..... தேசம் - .....

8. **எதிர்க்கருத்து எழுதுக.**

விண்ணை - ..... அநீதி - .....

9. **பன்மைச் சொல்லை எழுதுக.**

பயிரை - ..... நெல்லாய் - .....

03) பின்வரும் பாடலைவாசித்து வினாக்களுக்குரிய விடையைப் பாடலில் இருந்து தெரிந்து எழுதுக.

அருமை மிக்க நாயினை
அழைத்துக் கொண்டு தெருவிலே
சிறுவன் ஒருவன் செல்லுவான்
தினமும் ஆடு மேய்க்கவே

தெருவில் நாயும் அவனுமே
செல்லுகின்ற காட்சியை
சிறுமி ஒருத்தி ஆவலாய்த்
தினமும் பார்த்து வந்தனள்

1. ஆடு மேய்க்கச் சென்றவர் யார்? .....

2. உயர்திணைப் பெயர்ச் சொற்கள் .....

3. அஃறிணைப் பெயர்ச் சொல் யாது? .....

4. பெயரடை மொழியை எழுதுக. .....

5. இடப் பெயரை எழுதுக. .....

6. உயர்திணை வினைச் சொற்கள் .....

7. ஒத்த கருத்துச் சொல்லை எழுதுக.

ஞமலி - .....

ஒவ்வொரு நாளும் - .....

08) எதிர்க்கருத்து எழுதுக.

இவனுமே - .....

www.ikedu.lk

04. பின்வரும் பாடலை வாசித்து 01 தொடக்கம் 10 வரையான வினாக்களுக்கு விடை எழுதுக.

துள்ளித் துள்ளி ஓடுது பார்
வெள்ளை முயல் அம்மா – அதை
மெல்ல ஓடிப் பிடித்திடவே
மிகவும் ஆசை அம்மா.

பஞ்சு போன்ற உடலைத் தடவிப்
பார்க்க ஆசை அம்மா – நான்
கொஞ்சிப் பேசிக்கூடி ஆடிக்
குதிக்க வேண்டும் அம்மா.

பளிங்குக் கண்ணைக் கூர்ந்து நானும்
பார்க்க ஆசை அம்மா – இது
ஒளிந்து கொள்ளப் புதரை நோக்கி
ஓடப் பார்க்கு தம்மா.

புல்லைத் தினமும் பிடுங்கிப் பிடுங்கிப்
போடு வேனே அம்மா – அது
மெல்ல மெல்லக் கடித்துக் கடித்து
உள்ளே தள்ளும் அம்மா.

நெட்டைக் காது இரண்டும் மேலே
நிமிர்ந்து நிற்கு தம்மா – நான்
தொட்டுப் பிடித்தே இழுக்க மாட்டேன்
சொல்லை நம்பு அம்மா.

01. பாடலில் உள்ள அடுக்குமொழிகள் இரண்டு எழுதுக.

..... , ...

02. அடைமொழிகள் இரண்டு எழுதுக.

..... , ...

03. உவமைத் தொடர் ஒன்று எழுதுக. .....

04. தன்மை ஒருமைப் பெயர்ச்சொல் யாது? .....

05. தன்மை ஒருமை வினைச்சொல்லை எழுதுக. .....

06. இணைமொழிகள் இரண்டு எழுதுக. .....

07. "புல்லை" என்பதன் பன்மை யாது? .....

08. "உள்ளே" என்பதன் எதிர்க்கருத்தை எழுதுக. .....

09. "ஆசை" என்பதன் ஒத்தகருத்துச் சொல். .....

10. சினைப்பெயர் ஒன்று எழுதுக. .....

05. சரியான சொல்லின் கீழ்க் கோடிடுக.

1) போர்க்களம், போர்ற்களம், போர்க்கழம், போற்களம்

2) எண்ணை, எண்நெய், எண்ணெய், என்னெய்

3) சுற்றவாளி, சுத்தவாளி, சுத்தவாலி, சுத்தவாழி

4) மறுத்துநீர், மருத்துநீர், மரத்துனீர், மருத்துனீர்

06. ஒழுங்கு படுத்தி எழுதுக.

1) திரிந்த/ அங்குமிங்கும்/ சிறுவன் / அலைந்து/ இளைப்பாறினான்/ மரநிழலில்

.....

2) பாதுகாக்க / எங்களுடையதாக / அரசாங்கத்தின் / நினைத்துப் / வேண்டும் /சொத்துக்களை

.....

07. குறியீடு இடுக.

1) மெய் வாய் கண் மூக்கு செவி என்பன ஐம்பொறிகளாகும்

2) அறஞ்செய விரும்பு என்று ஔவைப்பாட்டி கூறினார்

www.ikeau.lk

ஒழுங்குபடுத்துதல் / வாக்கியமாக்குதல்

1) வளி / இந்தப் / சுற்றி/உள்ளது / மண்டலம் / பூமியைச்

.....

2) வெளியிடுவதில் / பத்திரிகை / பிரதான / வகிக்கின்றது / இடம் / செய்திகளை

.....

* கருத்து எழுதுக : பழமொழி
உவமைத்தொடர்
மரபுத்தொடர்

"ஆற்றிலே போட்டாலும் அளவறிந்து போடு" என்னும் பழமொழியின் கருத்தை எழுதுக.

.....

பின்வரும் கருத்துக்களை உணர்த்தும் பழமொழிகளை எழுதுங்கள்.

1) வீண்பழிக்குப் பயப்படாதே -.....

2) காலம் மாறி வரும் -.....

மரபுத்தொடரின் கருத்தை எழுதுக.

1) நுனிப்புல் மேய்தல் .....

2) வயிற்றிலடித்தல் -.....

உவமைத்தொடரின் கருத்தை எழுதுக.

1) அத்திபூத்தாற் போல -.....

2) இலைமறை காய் போல -.....

* சரியான சொற்களை இனங்காணல்

சரியாக எழுத்துக்கூட்டப்பட்ட சொல்லைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

1. 1)அறிவாலி 2) அறிவாழி 3) அரிவாளி 4) அறிவாளி

2. 1) அழைப்பிதள் 2) அளைப்பிதழ் 3) அழைப்பிதழ் 4) அழைப்பிதல்

* சரியான சொற்களை இனங்காணல்

ல, ள, ழ, ன, ண, ர, ற வேறுபாடு

1) கு.....ந்தைகள் நி.....க்காட்சியைக் கண்டு க.....த்தனர்.

2) மீன்.....கள் த..... .....ரிலுள்ள அழுக்குகளைத் தி.....று சுத்தப்படுத்துகின்றன.

* ஒலிமரபு

மிகச் சரியான ஒலி மரபுப் பெயர்களை உரிய இடைவெளியில் இட்டு நிரப்புக. (ஒலிக்குறிப்பு)

1) புறா -..... 2) மயில் -.....

3) சிங்கம் -..... 4) ஆந்தை -.....

www.lkedu.lk

01) பின்வரும் பந்தியை வாசித்து வினாக்களுக்குரிய விடையினை பந்தியில் இருந்து தெரிந்து எழுதுக.

துக்கத்தினால் பரதனுக்கு உடனடியாகப் பதில் கூற முடியவில்லை. சிறிது நேரம் கழித்து தன்னைச் சமாளித்துக் கொண்டு "அண்ணா, உன்னுடைய பிரிவைத்தாங்காமல் தந்தையும் உயிர் நீத்தார்" என விம்மலுடன் கூறினான். தந்தை இறந்தார் என்ற செய்தியைக் கேட்டதும் இராமன் அடியற்ற மரம்போல விழுந்தான். சிறிது நேரத்தின் பின் மயக்கம் நீங்கி எழுந்தான். சகோதரர்கள் ஒருவருக்கொருவர் ஆறுதல் கூறிக்கொண்டனர்.

1. உயர்திணை ஆண்பால் பெயர் யாது? .....

2. காலப் பெயர்ச் சொல்லை எழுதுக? .....

3. பெயரடை மொழியை எழுதுக? .....

4. உவமானத்தை எழுதுக. .....

5. ஒரே தாய் வயிற்றில் ஒன்றாகப் பிறந்தவர்கள் என்பதைக் குறிக்கும் சொல் .....

6. "புதினம்" என்பதன் ஒத்தகருத்து. .....

7. " கேள்வி " என்பதன் எதிர்க்கருத்து. .....

02)பின்வரும் பந்தியை வாசித்து வினாக்களுக்குரிய விடையினை பந்தியில் இருந்து தெரிந்து எழுதுக.

நாம் கல்விச் சுற்றுலா சென்ற வேளை அங்கு போயிருந்தோம். தூரத்தில் நின்று பார்த்தபோது ஒரு பெரிய சிங்கம் படுத்திருப்பது போலக் காட்சியளித்தது. அருகிலே சென்றபோதுதான் உண்மையான அமைப்பைக் கண்டு கொண்டோம். இருவர் இருவராக மலையில் ஏறினோம். கோட்டை தெரிந்தது. அக்கோட்டையைச் சுற்றி அழிபாடு அடைந்த நிலையில் அகழிகளும் தென்பட்டன.

1. தன்மைப் பெயர்ச் சொல் .....

2. உவமானத்தை எழுதுக. .....

3. பெயரடைமொழி யாது? .....

4. அடுக்கு மொழி யாது? .....

5. கோட்டையைச் சுற்றி பாதுகாக்க அமைக்கப்படும் அழமான நீர் நிலை .....

6. அருகில் என்பதன் எதிர்க்கருத்துச் சொல் .....

7. "குன்று" என்பதன் ஒத்த கருத்து .....

8. பெயரெச்சம் யாது? .....

9. உயர்திணைப் பன்மைப் வினைச்சொல் .....

10. அஃறிணை பெயர்ச் சொல் .....

www.kedu.lk

7. ஒத்த கருத்துச் சொல்லை எழுதுக.

1. ஞமலி - .....

2.ஒவ்வொரு நாளும் - .....

08) எதிர்க்கருத்து எழுதுக.

2.இவனுமே - .....

04) குயிடு இடுக.

1. ஆகா என்ன ஆனந்தம் எத்தனை அழகு

2. அண்ணா என்ன விந்தை

3. அதோ அண்ணா ஒர் ஆச்சிரமம் தெரிகிறது

05) சரியான சொல்லின் கீழ்க் கோடிடுக.

1. இராட்சியம் , இராச்சீயம் , இராச்சியம் , இறாச்சியம்

2. மனப்பூறணம் , மனப்பூரணம் , மறப்பூரணம் , மணப்பூரணம்

3. ஆராய்சி , ஆராச்சி , ஆராய்ச்சி , ஆராட்சி

4. செய்நன்றி , செய்ந்நன்றி , செய்ந்நன்ரி , செய்ந்நண்றி

06) பழமொழியின் கருத்து எழுதுக.

1. ஆஞ்சினவன் கண்ணுக்கு ஆகாயம் எல்லாம் பேய்

.....

2. மின்னுவதெல்லாம் பொன்னல்ல.

.....

07) பின்வருவனவற்றில் விடுபட்ட சொல்லை பூர்த்தி செய்க.

1. உத்தமர் தாம் ஈயுமிடத்து ..... போல்வரே

மத்திமர் தாம் தெங்குதனை மானுவரே - முத்து அலரும்

ஆம்கமுகு போல்வார் ..... அவர்களே

தேம்கதலியும் போல்வார் தேர்ந்து

2. ஈசன் நாமத்தை - .....

ஏத்திப் புகழவேண்டும்

தாச தாசனாய்ப் - பணிந்து

..... காக்கவேண்டும்

3. நன்மை செய்பவரே - உலகம்

நாடும் .....

தின்மை செய்பவரே - அண்டித்

தீண்ட ஒண்ணாதார்.

4. " செல்வம் என்பது ..... நிறைவே"

"போதும் என்ற மனமே .....மருந்து"

www.lkedu.lk

மிகச் சரியான விடையின் கீழ்க் கீறிடுக.

01. இலங்கை அமைந்திருப்பது இந்தியாவுக்கு
1) தெற்கில் 2) கிழக்கில் 3) வடக்கில் 4) மேற்கில்

02. புத்தகங்களுக்குப் பெருமளவு சேதம் விளைவிக்கும் பிராணிகளை மாத்திரம் கொண்ட விடை
1) இராமபாணம், கரப்பான் 2) இராமபாணம், கறையான்
3) எலி, நுளம்பு 4) கறையான், நுளம்பு

03. கலாவாவி, மின்னேரியாக்குளம் ஆகியவற்றைக் கட்டுவித்த அரசர்களை முறையே காட்டுவது.
1) தாதுசேனன், மகாசேனன் 2) பண்டுகாபயன், மகாசேனன்
3) மகாசேனன், வசபன் 4) முகலன், தாதுசேனன்

04. நீர்ப்பாத்திரத்தில் பனிக்கட்டி காணப்படும் விதம்
1)  2)  3)  4) 



05. 
இவ்வுரு உணர்த்தும் கருத்து
1) முன்னால் வளைவான பாதை 2) மின் தாக்குதல் ஏற்பட இடமுண்டு
3) முன்னால் பாதை ஒடுங்கிச் செல்கிறது 4) மின் விநியோகிக்கும் இடம்

06. 
இது எப்பிராணி போலப் பயணிப்பதைக் காட்டுகிறது.
1) புளுணி போல் 2) முயல்போல
3) கரடி போல் 4) நண்டு போல


07. எண்ணை வித்துப் பரம்பலடைவது
1) விலங்குகளால் 2) காற்றினால் 3) நீரினால் 4) வெடிப்பதனால்

08. 
உருவில் உள்ள இப்பெரியார்
1) அநாகரிக தர்மபால 2) கலாநிதி ஆனந்தக் குமாரசாமி
3) சேர். டீ. பி. ஜயதிலக 4) கொங்காலேகொட பண்டா

09. எட்டுக் கால்களைக் கொண்ட பிராணி
1) வீட்டு ஈ 2) கரப்பான் 3) வண்ணத்துப்பூச்சி 4) சிலந்தி

10. சுவரைக் கட்டும் போது நிலைக்குத்தியல்பைப் பேணுவதற்காகப் பயன்படும் உபகரணம்.
1)  2)  3)  4) 

11. 
இத்தாவரம்
1) திப்பிலி 2) வட்டக்கன்னி
3) கத்தாப்பு 4) கற்பூரவள்ளி

12. சூரிய நமஸ்காரப் பயிற்சியின் ஐந்தாம் கட்டத்தை காட்டுவது
1)  2)  3)  4) 

13. கண்கள், காதுகள் ஆகிய இரண்டையும் பயன்படுத்தித் தகவல்களைப் பெறக்கூடிய ஊடகம்
1) ஒலிபெருக்கி 2) செய்திப்பத்திரிகை 3) தொலைக்காட்சி 4) சுவரொட்டி

14. நீரில் இடப்பட்ட பின்வரும் எப்பொருள் நீருக்கு மேல் மிதக்கும்?
1) நிறச்சாயக் கரைசல் 2) தேயிலைச் சாயம்
3) வினாகிரி 4) தேங்காய் எண்ணெய்

www.keyulk

15. ஒருவர், வதிவை உறுதிப்படுத்தும் சான்றிதழைப் பெறச் செல்ல வேண்டியது.
1) பிரதேச செயலரிடம் 2) கிராம அலுவலரிடம்
3) பொலிஸ் நிலைய அலுவலரிடம் 4) சமுர்த்தி அலுவலரிடம்

16. 
இந்தப் பாதம் எப்பறவைக்குரியது?
1) மீன் கொத்தி 2) தாரா
3) ஆள்க்காட்டி குருவி 4) சேவல்

17. முலையூட்டி விலங்கு
1) பல்லி 2) ஒணான் 3) உடும்பு 4) கீரி

18. மண்ணை வளமாக்க உதவும் விலங்கு
1) மட்டைத்தேள் 2) மண்புழு 3) மரவட்டை 4) அட்டை

19. பயிர்ச்செய்கையில் விவசாயிக்கு உதவும் விலங்கு
1) தேனீ 2) ஏபிட்டு 3) நெல்ஈ 4) தும்பி

20. நடுவதற்கு உகந்த வித்தில் இருக்கவேண்டிய ஓர் இயல்பு
1) முதிராத வித்தாக இருத்தல்
2) புறத்தோல் கறைபடாது பளபளப்பாக இருத்தல்
3) காயப்பட்டிருத்தல்
4) வித்து நிறம் மாறியிருத்தல்

21. விற்றமின் அதிகம் இருக்கும் உணவு
1) கடலை 2) வத்தாளை 3) சோயா 4) தக்காளி

22. நீரிழிவு நோயைக் கட்டுப்படுத்துவதற்கு மிக உகந்த உணவு
1) பாண் 2) நூடில்ஸ் 3) கௌபி 4) மரவள்ளி

23. நுளம்புகளைக் கட்டுப்படுத்துவதற்கு இலகுவான உகந்த முறை
1) வீட்டில் உள்ள நும்புகளை அழித்தல்
2) நுளம்பு முட்டைகளை அழித்தல்
3) நுளம்புக் குடம்பிகளை அழித்தல்
4) சுற்றாடலில் நீர் தேங்குவதற்கு இடமளிக்காதிருத்தல்.

24. தொற்றுநோய் (பிரதேசம் பூராகவும்) பரவும்போது உடனடியாக எவருக்கு அறிவிக்க வேண்டும்?
1) பொலிஸ் நிலையப் பொறுப்பு அலுவலருக்கு
2) மருத்துவமனையின் மருத்துவ அலுவலருக்கு
3) பாடசாலை அதிபருக்கு
4) பொது சுகாதாரப் பரிசோதகருக்கு


25. நிலநடுக்கத்தின்போது ஒருவர் தன்னைப் பாதுகாப்பதற்கு உடனடியாகச் செய்ய வேண்டியது
1) இருக்கும் இடத்திலேயே இருத்தல் 2) மரத்திற்குக் கீழே இருத்தல்
3) உயரமான கட்டடத்திற்குச் செல்லல் 4) திறந்த வெளிக்குச் செல்லல்

26. ஆண்டு முழுவதும் பூக்கும் தாவரம்
1) கொன்றை 2) முள்முருக்கு 3) அலரி 4) ஆவரசு

27. நீர்வாழ் தாவரம்
1) சீதேவியார் செங்கழுநீர் 2) ஊதுபூ
2) பன்னம் 4) ஐதரில்லா

28. உருவில் காணப்படும் பறவையின் பெயர் யாது?
1) மீன்கொத்தி 2) குக்குறுவான் 3) கானாங்கோழி 4) கிளி


29. பின்வரும் உபகரணங்களில் குளிர்பானப் போத்தலைத் திறக்கப் பயன்படுத்தப்படுவது,
1) 
2) 
3) 
4) 


30. உருவில் காணப்படும் தையல் முறை யாது?

1) கம்பளித் தையல் 2) மீன்முள்ளுத் தையல்
3) வெட்டுக்குத்துத் தையல் 4) சங்கிலித் தையல்


www.ikedu.lk

31. மனதை ஒருமுகப்படுத்தும் செயற்பாட்டின் உம்படி

1) மனவுறுதி 2) பிரார்த்தனை 3) உடலைத் தளர்த்தல் 4) மனதைத்த தளர்த்தல்

32. காடுகளில் உள்ள தாவரங்களின் எண்ணிக்கையை சமநிலையில பேண உதவும் பிராணி.








33. அழகான வால் தோகையுடைய பறவை

1) மயில் 2) இரட்டைவாற்குருவி 3) கரிக்குருவி 4) நீண்டவாற்குருவி

34. உணவை முழுமையாக விழுங்கும் பிராணி



35. தேசப்படம் வரையும் போது தரைத்தோற்ற வேறுபாட்டை காட்ட மேட்டு நிலங்களுக்குப் பயன்படுத்தும் நியம நிறம்

1) கறுப்பு 2) பச்சை 3) கபிலம் 4) மஞ்சள்

36. நில்வளவ கங்கை கடலுடன் கலக்கும் மாகாணம்.

1) கிழக்குமாகாணம் 2) தென்மாகாணம் 3) மேல் மாகாணம் 4) வடமத்தியமாகாணம்

37. வளமான மண்ணின் இயல்பாக அமையாதது.

1) நீர் வடிப்பின்மை 3) போதியளவு நீர் பற்றும் திறன்

2)போதியவளியூட்டம் 4) மண்போசணைப் பதார்த்தம்

38.  அருகிலுள்ள சந்திரனின் வடிவம் எத்தனையாம் நாள் எதிர்புறம் திரும்பும்.

1)4ஆம் நாள் 2) 10 ஆம் நாள்

3) 8 ஆம் நாள் 4) 14 ஆம் நாள்

39. அருகிலுள்ள உடுத்தொகுதி வழங்கும் பெயர்



1) வேட்டைக்காரன் 2) பெருங்கரடி

3) கலப்பை 4) பெருநாய்

40. இலங்கையின் தர நிர்ணய சான்றிதழ் பொறிக்கப்பட்டிருக்கும் பாவனைப் பொருள் அல்லாதது

1) தண்ணீர்போத்தல் 2) மின்குமிழ் 3) தீப்பெட்டி 4) பாடநூல்

41. இலங்கையில் மிக உயரமான நீர்வீழ்ச்சி

1) இராவணன் எல்ல 2) லக்சபான 3) பம்பரகந்த 4) கிரிந்த அல்ல

42. கலப்படமில்லாத தரமானதேயிலையை இனம் காணும் விதம் எது?

1) நீரினுள் இட்டால் உடனடியாக கடும்கபில நிறம் தோன்றும்.

2) நீரினுள் இட்டால் உடனடியாக கபில நிறம் தோன்றும்.

3) நீரினுள் இட்டால் உடனடியாக மஞ்சள் நிறம் தோன்றும்

4) நீரினுள் இட்டால் உடனடியாக இளமஞ்சள் நிறம் தோன்றும்.

43. மிக விரைவில் எரிந்து போகக் கூடிய மின் விளக்குகளுக்குப் பதிலாகப் பொருத்தக் கூடிய மின்சேமிப்பு விளக்கு எது?

1) இழை மின்குமிழ் 2) புளோரொளிர்வு விளக்கு

3) CFL மின்விளக்கு 4) சாதாரண விளக்கு

www.ikeduk

44. எமக்கு இலவசமாக கிடைக்கும் சேவைகள்

1) வைத்தியசேவை, போக்குவரத்து
2) தொலைபேசி , அஞ்சல்சேவை
3) கல்வி , தொலைபேசி
4) சுகாதாரம் , கல்வி

45. முலையூட்டி விலங்குகளுக்கு உதாரணம்.

1) ஒணான்
2) வெளவால்
3) முதலை
4) உடும்பு

46. ஒர் அமாவாசைக்கும் அடுத்த அமாவாசைக்கும் இடைப்பட்ட நாட்கள் எத்தனை?

1)28
2) 29
3) 30
4) 31

47. மனிதனின் பொருளாதாரப் பயனுக்காக வளர்க்கும் பிராணி அல்லாதது.

1) தேனீ
2) யானை
3) பசு
4) தாரா

48. நீர்வாழ் தாவரம்

1) சீதேவியார் செங்கழுநீர்
2) ஊதுபூ
2) பன்னம்
4) ஐதரில்லா

49. மாம்பழம், வேங்கை, தேங்காய் என்னும் வித்து வகைகள் பரம்பல் அடைவது முறையே

1) காற்றின் மூலம், நீரின் மூலம் , விலங்குகளின் மூலம்
2) காற்றின் மூலம், விலங்குகளின் மூலம், நீரின் மூலம்
3) நீரின் மூலம், காற்றின் மூலம் , விலங்குகளின் மூலம்
4) விலங்குகளின் மூலம் , காற்றின் மூலம் , நீரின் மூலம்

50 தாவர இலைகளைப் பயன்படுத்திக் கூடுகளைச் செய்வது,

1) கொக்கு
2) காகம்
3) முசிறு
4) அணில்


இடைவெளி நிரப்புங்கள்

1. மேட்டுநிலங்களிலிருந்து கழுவி எடுத்து வரப்படும் மணல்..... படிகின்றன.
2. கொழும்பு முகத்துவாரக் கடலுடன்..... கலக்கும்.
3. மண்ணரிப்புக் காரணமாக மண்ணின்..... குறைவடையும்.
4. இலங்கைக்கு மட்டுமே உரித்தான பிராணிகளில்..... ஒன்றாகும்.
5. இஸ்லாமிய சமூகத்தினர்..... இறைச்சி உண்பதில்லை.

களனிகங்கை
ஆறுகளில்
களுகங்கை
நீர்
வளம்
யானை
நரைப்புழுணி
பன்றி
மரை

❖ கீழே தரப்பட்டுள்ள உருக்களின் பெயர்களைப் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

01)




.....

02)




.....

03)



.....


04)



.....

www.lkedu.lk


வினாத்தாள் I விடைகாணும் வழிகள்



= ரூபாய் 50.00



= ரூபாய் 70.00



= ரூபாய் 35.00

1) A தோடம் + தோடம் + அப்பிள் + அப்பிள் - 50

C தோடம் + அப்பிள் + அப்பிள் - 35

C விட A இல் 1 தோடை அதிகமாகும்

50 - 35 = 15

எனவே தோடம் பழம் ஒன்று 15 ரூபாய்

B இல் தோடம் + தோடம் + அன்னாசி = 70

15 + 15 + 40 = 70

எனவே அன்னாசிப்பழம் = 40

C இல் தோடம் + அப்பிள் + அப்பிள் = 35

15 + 10 + 10 = 35

அப்பிள் 10 ரூபாய்

```
  5 0
- 3 5
-------
  1 5
```

```
  7 0
- 3 0
-------
  4 0
```

```
  1 5
+ 1 5
-------
  3 0
```

```
  3 5
- 1 5
-------
  2 0
```

```
        10
     -------
2  |  20
      20
```

01

2) யூலை 1 திகதி செவ்வாய்க்கிழமை எனின் யூலை 31 ஆம் திகதி என்ன கிழமை?

யூலை 1 - செவ்வாய்

1 ஆம் திகதி செவ்வாய் எனில் 7 நாட்களால்

(1கிழமையால்) செவ்வாய்வரும்

1 ஆம் திகதி செவ்வாய் எனின் 14 நாட்களால்

(2 கிழமையால்) செவ்வாய் வரும்

1ஆம் திகதி செவ்வாய் எனின் 21 நாட்களால்

(3 கிழமையால்) செவ்வாய் வரும்

1 ஆம் திகதி செவ்வாய் எனின் 28 நாட்களால்

(4 கிழமையால்) செவ்வாய் வரும்.

```
  1 - செவ்வாய்
+ 7
-------
  8 - செவ்வாய்
+ 7
-------
  15 - செவ்வாய்
+ 7
-------
  22 - செவ்வாய்
+ 7
-------
  29 - செவ்வாய்
  30 - புதன்
  31 - விழாயன்
```


```
  1 - செவ்வாய்
+ 14
-------
  15 - செவ்வாய்
+ 14
-------
  29 - செவ்வாய்
  30 - புதன்
  31 - வியாழன்
```

```
  1 - செவ்வாய்
+ 21
-------
  22 - செவ்வாய்
+ 7
-------
  29 - செவ்வாய்
  30 - புதன்
  31 - வியாழன்
```


மேற்குறிப்பிட்ட எந்த வழிலும் 7 ஐக் கூட்டியோ அல்லது 14 ஐக் கூட்டியோ அல்லது 21 ஐக் கூட்டியோ அல்லது 28 ஐக் கூட்டியோ ....காணலாம்.

www.ikedu.lk


3) சதுர வடிவக் கடதாசி யொன்றை பல தடவைகள் மடித்து விரித்த போது மடிக்கப்பட்ட இரேகைகள் உருவில் காணப்படும் முறையில் காணக்கிடைத்தது. அதன்படி சதுரவடிவக் கடதாசியை மடித்த தடவைகளின் எண்ணிக்கை யாது?




முதலாவது மடிப்பின் போது




1ஆவது மடிப்பு



2 ஆவது மடிப்பு



3 ஆவது மடிப்பு



4) ஒரு கொடிக் கோர்வையில் நீலம், சிவப்பு, மஞ்சள், நீலம், சிவப்பு, மஞ்சள் என்ற ஒழுங்கில் கொடிகள் கோர்வையில் தொங்கவிடப்பட்டிருந்தன. அந்தக் கோர்வையில் உள்ள மொத்த கொடிகளின் எண்ணிக்கை 21 ஆகும். அந்தக் கொடிக் கோர்வையில் உள்ள 1 ஆவது கொடி நீலம் எனில் அந்தக் கொடிக் கோர்வையிலுள்ள சிவப்பு நிறக்கொடிகளின் எண்ணிக்கை யாது?

3 நிறங்கள் உள்ளன3 ஆவது நிறமான மஞ்சள்
3 ஆம் பெருக்கத்தில் வரும் (3 இன் மடங்காக)
2 ஆவது நிறம் 3 இன் பெருக்கத்தில் 1 குறைவாக வரும்
1ஆவது நிறம் 3 இன் பெருக்கத்தில் 2 குறைவாக வரும்

$$3 \overline{)45}\ 15$$
$$\underline{3}$$
$$15$$
$$15$$

நீலம்	சிவப்பு	மஞ்சள்
15	15	15

45 கொடிகளையும் 3 , 3 ஆக பிரித்தல்
15 மூன்றுகள் உள்ள

நீலம்	சிவப்பு	மஞ்சள்
1	2	3
4	5	6
7	8	9
10	11	12
13	14	15
16	17	18
19	20	21

இவ்வாறு போட்டுப் பார்க்கக் கூடாது ஆனால் இதன் கோலத்தைப் பாருங்கள்

47 கொடிகள் இருந்தால்

$$3 \overline{)47}\ 15$$
$$\underline{3}$$
$$17$$
$$\underline{15}$$
$$2$$

நீலம்	சிவப்பு	மஞ்சள்
16	16	15

மிகுதி 2 ஐயும் நீலம் , சிவப்பு பெறும்

$$3 \overline{)21}\ 7$$
$$\underline{21}$$
$$0$$

எனவே 21 ஆவது கொடி மஞ்சள் ஆகும்

5) 4 மனிதர்கள் கிணற்றை வெட்டி முடிக்க 6 நாட்கள் தேவை அதன்படி 3 நாட்களில் அக் கிணற்றை வெட்டி முடிக்கத் தேவைப்படும் மனிதர்கள் எத்தனை பேர்?
4 மனிதர்கள் ஒரு கிணறு வெட்ட - 6 நாள்

4 மனிதர்கள் 1 நாளில் 4 சம்பளம் பெறுவார்கள்
4 மனிதர்கள் 6 நாளில் 4 × 6 = 24 சம்பளம் பெறுவார்கள்

24 சம்பளவேலையை 3 நாட்களில் முடிக்க வேண்டும் எனின்

$$3 \overline{)24}\ 8$$
$$24$$

ஒரு நாளில் 8 சம்பளம் கொடுக்க வேண்டும் எனவே ஒரு நாளில் 8 மனிதர்கள் வேலை செய்ய வேண்டும்.

www.lkedu.lk

6)ஒரு விழாவில் ஐந்து நண்பர்கள் சந்தித்துக் கொண்டார்கள். அவர்கள் ஒவ்வொருவரும் தமக்குள் கைகளை குலுக்கி மகிழ்ச்சி தெரிவித்தார்கள். அவர்கள் ஐவருக்கும் இடையில் இடம் பெற்ற கை குலுக்கல்களில் எண்ணிக்கை யாது?

1. 5 2. 20 3. 25

விளக்கம் :-



விடை - 10


மேலதிக விளக்கம்:-

மேலுள்ள வினா போன்ற வாழ்த்து மடல்களின் எண்ணிக்கையின் அரைவாசியே கைகுலுக்கல்களின் எண்ணிக்கை


ஐவரிடையே 5 × 4 = 20 ÷ 2 = 10
நால்வரிடையே 4 × 3 = 12 ÷ 2 = 6
மூவரிடையே 3 × 2 = 6 ÷ 2 = 3

முதலாமவர் நால்வருக்கு கைகுலுக்கினார்
எனவே இரண்டாமவர் மூவருக்கு கைகுலுக்கினார்.
எனவே மூன்றாமவர் இருவருக்கு கைகுலுக்கினார்.
எனவே நான்காமவர் ஒருவருக்கு கைகுலுக்கினார்.
எனவே ஐந்தாமவர் ஒருவருக்கு கைகுலுக்கத்தேவையில்லை

7) கீழே தரப்பட்டுள்ள கோலத்தை அவதானித்து அடையாளம் இடப்பட்டுள்ள இடங்களுக்குப் பொருத்தமான எண்களை எழுதுக.




விளக்கம் : -



3 + 6 = 9 × 9 = 81
7 × 7 = 49 + 6 = 55
6 + 6 = 12 × 12 = 144

எனவே விடை - 12 , 144

8) பின்வரும் கோலத்தை அவதானித்து அடையாளமிடப்பட்டுள்ள இடங்களுக்குப் பொருத்தமான எண்களை எழுதுக.



விளக்கம் : -



8 - 2 = 6 + 50 = 56
7 + 50 = 57 - 2 = 55
10 - 2 = 8 + 50 = 58

எனவே விடை - 8, 58

www.kedu.lk

12) இப்போது கேட்பது இரண்டாவது வெடியின் சத்தமாகும். வெடிச்சத்தம் எந்தத் திசையிலிருந்து வந்ததென எனக்கு அறிந்து கொள்ள முடியவில்லை. நான் தந்தையிடமிருந்து பிரிந்து ஒடிவந்து இங்கு ஒளிந்துள்ளேன். எனது முன்னங்கால் ஒன்று காயப்பட்டு இரத்தம் பாய்கிறது. தந்தைக்கு என்ன நடந்ததென எனக்குத் தெரியாது. தந்தைக்கு வெடி பட்டதா? தந்தை வெடித் தாக்குதலால் இறந்து விட்டாரா? எனக்கு அறிந்து கொள்ளமுடியவில்லை. எனது இதயம் படபடக்கிறது. எனது முழு உடம்பும் நடுங்குகிறது. கண்களிலிருந்து கண்ணீர் பெருகுகின்றது. நாங்கள் எப்பொழுதும். பயத்துடனேயே வாழ்கிறோம். காட்டில் உலாவித் திரியும் முறை பற்றியும் பகைவர்களிடமிருந்து தப்பும் முறை பற்றியும் தந்தை எப்போதும் எனக்கு சொல்லித்தந்துள்ளார். இருந்தும் இன்று தந்தை பகைவரின் வெடிக்கு இரையாகி விட்டார்.

1. இங்கு கூறப்படுவது,
    1. அநாதையான பிள்ளையின் சிந்தனை
    2. ஆபத்துக்குள்ளான பிராணியின் சிந்தனை
    3. வேட்டைக்குச் சென்ற பிள்ளையிள் சிந்தனை

2. இங்கு தரப்பட்டுள்ள விவரங்களின்படி இந்நிகழ்ச்சி நடைபெற்றது.
    1. காலையில் எனக் கூறலாம்
    2. மாலையில் எனக் கூறலாம்
    3. நாளின் எந்த நேரத்தில் எனக் கூறமுடியாது.

விளக்கம் : -






எனது முன்னங்கால் ஒன்று காயப்பட்டு இரத்தம் பாய்கிறது. இதன்படி முன்னங்கால் இருப்பது பிராணிக்கே எனவே , முதலாவதற்கான விடை ஆபத்துக்குள்ளான பிராணியின் சிந்தனை. அடுத்து இந்நிகழ்வு நடைபெற்ற நேரம் பந்தியில் குறிப்பிடவில்லை. எனவே இரண்டாவதற்கான விடை நாளின் எந்த நேரத்தில் எனக் கூறமுடியாது. என்பதாகும்.

விடை -

1. ஆபத்துக்குள்ளானது பிராணியின் சிந்தனை
2. நாளின் எந்த நேரத்தில் எனக் கூறமுடியாது.

www.lkedu.lk

Name the pictures

1.  2.  3.  4.  5. 

....

6.There is a ..... near the house. 

7. There are two ..... 

8. He is ..... 

பொருத்தமான சொல்லினைத் தெரிந்து எழுதுக.

9. We go to the .....to borrow books (book shop , library , post office)

10. (How, Where) ..... do you come to school?

11. I..... a good child . (am , is)

12. Please ..... your home work . (write . do)

உரையாடலைப் பூர்த்தி செய்க.



13. What do you play?

I play .....







Where is the dog?

14. It is .....





பொருத்தமான சொல்லின் கீழ்க் கோடிடுக.

15 

television

telephone

camera

16. 

knife

spoon

ruler

17. 

television

radio

computer

www.ikeda.lk

பொருத்தமானஆங்கிலக் கருத்தினை எழுதுக.

18. வானவில் - ..... 19. மஞ்சள் நிறம் - .....

20. விமான நிலையம் - ..... 21. சந்தை - .....

22. தயவு செய்து உங்கள் வீட்டு வேலையைச் செய்யுங்கள்.

.....

23. நான் தாவரங்களிற்கு நீர் ஊற்றிக்கொண்டிருக்கிறேன்.

.....

24. நாங்கள் எமது கைகளைக் கழுவுவோமா?

.....

25. நான் வகுப்பறையைக் கூட்டுவேன்.

.....

26. நாங்கள் விளையாட்டு மைதானத்திற்குச் செல்வோம்.

.....

ஒழுங்குபடுத்தி கருத்துள்ள ஆங்கிலச் சொற்களை எழுதுவோம்

27. relur - ..... 28. ohclos - .....

29.aihrc - ..... 30. ordtoc - .....

பொருத்தமான கருத்தினை எழுதுக.

31. calendar - ..... 32. finger - .....

33. water - ..... 34. mother - .....

35. Is this yours? .....

36. I want to dance. .....

37.What colour is the sky?

.....

38.Please take this to the office.

.....

39. Where do you live?


.....

40. You have done well.

.....

www.ikeau.lk

படத்திற்குப் பொருத்தமான சிங்களக் கருத்தினை எழுதுக.

1)  2)  3)  4)  5) 

_____ _____ _____ _____ _____

06) 

ඔ (b)පෙ වයස කීයද?

.....

 9

07) 

උඹලගෙ කට්ටිය ඔයාට කැමතිද?

.....

කොහොමත් කැමතියි

.....



பொருத்தமான தமிழ்க் கருத்தை எழுதுக.

8. திவுள் ..... 11. கலுலேல்ல .....

9. ப(த்) தோல ..... 12. வித்யா காரய .....

10. இரிதா ..... 13. லியன்ன .....

14. சீனுவ கஹனவா

.....

15. செல்லம் கறன்ன யமுத?

.....

16. ஆபன சாலாவ கொத்தன தியன்னே?

.....

17.அம்மா உயல இவறத?

.....

18. பித்தரயக் மில கியத?

.....

19. தாத்தா வடட்ட யனவா?

.....

20.மினிஸ்ஸு பொலட்ட எனவா.

.....

www.ikedu.lk

பொருத்தமான சிங்களக் கருத்தை எழுதுக.

1. சூரியன் - .....
2. திங்கள் - .....
3. பழங்கள் - .....
4. கோழி - .....
5. பாம்பு - .....
6. நுளம்பு - .....
7. எடுங்கள் - .....
8. முப்பது - .....
9. விளையாட்டு முற்றம் - .....
10. வட்டம் - .....

11. நாங்கள் சோறு சாப்பிடுவோம்.

.....

12. பஸ் வண்டி வந்து விட்டது.

.....

13. சூரியன் உதிக்கின்றது.

.....

14. பிள்ளைகள் விளையாடுகின்றார்கள்

.....

15. தண்ணீர் தாருங்கள்

.....

16. எனக்குப் பால் தாருங்கள்

.....

17. வைத்தியர் வருவது எத்தனை மணிக்கு?

.....

18. நான் போய் வரட்டுமா?

.....

19. எனக்கு பட்டம் ஒன்று கட்டித் தாருங்கள்.

.....

20. சுப தினம் ஆகட்டும்.

.....

www.lkedu.lk

01. அல்லும் பகலும் என்ற பாடலை இயற்றியவர் யார்? .....

02. மகாத்மா காந்தி பிறந்த மாநிலம் எது? .....

03. இன்னா செய்தாரை ஒறுத்தல் .....

.....

04. காந்தியடிகள் எழுதிய சுயசரிதை யாது? .....

05. காந்தியடிகள் வாழ்ந்த நூற்றாண்டு .....

06. காந்தித் தாத்தா நம் தாத்தா.... பாடலை இயற்றியவர். .....

07. நன்றி மறப்பது நன்றன்று ..... ,

.....

08. காலதினாற் செய்த நன்றி ..... ,

.....

09. தினைத் துணை நன்றி ..... ,

.....

10. எந்நன்றி கொன்றார்க்கும் ..... ,

.....

11. கோசலையின் மகன் .....

சுமித்திரையின் மகன் .....

கைகேயியின் மகன் .....

12. சுத்தமே என்றும் சுகம் அளிக்கும்..... எனும் பாடலை இயற்றியவர்

.....

13. எண்ணிய முடித்தல் வேண்டும் என்னும் பாடலைப் பாடியவர்

.....

www.lkedu.lk

14. இன்றைய நவீன கணினி உருவாக்கத்திற்கு வழிகாட்டும் விதமாக இருந்தவர் யார்?

.....

15. ஆசியஜோதியை இயற்றியவர் யார்? .....

16. காரிருள் அகத்தில் நல்ல கதிரரெளி நீதான்..... இந்தப்பாடல் எது பற்றியது

.....

இதனை இயற்றியவர் யார்? .....

17. நொதித்தல் பற்றிய ஆராய்ச்சியில் ஈடுப்பட்ட விஞ்ஞானி .....

18. உணவுப் பொருட்கள் பழுதடைவதற்கு காரணமாக விளங்குவன. .....

19.அந்திராக்ஸ் என்னும் நோய் எவற்றில் காணலாம்? .....

20. உறுதியும் உழைப்பும் உள்ளவனுக்கு வெற்றி .....

21. காலை மானும் ..... மானும் குளத்தில் நீர் பருகின.

22.களிற்றுயானை முன்னே செல்ல ..... அதனைப் பின் தொடர்ந்தது.

23. அபூ ஹனீபா செய்த தொழில் .....

24. வெப்பமும் வரட்சியுமுடைய மணல் பிரதேசம் .....

25. சாய்ந்தாடம்மா சாய்ந்தாடு

தாமரைப்பூவே சாய்ந்தாடு.....

..... சாய்ந்தாடு

..... சாய்ந்தாடு.

www.ikeou.lk

www.lkedu.lk

ஆசிரியரின் ஏனைய நூல்கள்

சுற்றாடல் சார் செயற்பாடுகள்

புலமைப்பரிசில் வழிகாட்டி

செயன்முறை ரீதியான சுற்றாடல் சார் செயற்பாடுகள்

தரம் 5 கணிதம்

தரம் 1 கணிதம்

தரம் - 5 மாணவர்களுக்கான

புலமைப்பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள்கள்

தரம் - 4 , தரம் - 3 , தரம் - 2 மாணவர்களுக்கான

பயிற்சிப் பரீட்சை வினாத்தாள்கள்

ஜஸ்மி பிறின்டேர்ஸ் - 0779430417